செ.வெ.எண்: 13 நாள்:05.12.2018

கரூர் மாவட்டம்

**பள்ளிவாசலில் வேலை செய்தவர்கள் ஓய்வூதியம் பெற விண்ணப்பிக்கலாம் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழக அரசு சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் உலமாக்கள் வாரியம் செயல்பட்டுவருகிறது. இதன் மூலம் பள்ளிவாசல்கள், மதரஸாக்களில் பணிபுரியும் 18 முதல் 60 வயது உடையவர்கள் பதிவு செய்யப்பட்டு அதற்கான அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அடையாள அட்டை உடையவர்கள் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை இயற்கை மரணம் உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, விபத்து மரண உதவித்தொகை, மகப்பேறு/கருச்சிதைவு உதவித்தொகை உள்ளிட்ட அரசு நலத்திட்டங்கள் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். 60 வயது அடைந்து ஓய்வு பெற்றவர்கள் ஓய்வூதியம் பெற விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

இவ்வாறு, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**